


# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்

## பெருந்துறை பேரூராட்சி

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பெருந்துறை பேரூராட்சி மற்றும் கிராமம், ச.எண் - **1056/1A** -ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

இணையதள விண்ணப்ப எண் : 85Y972O9 ERD / /2023 நாள் : 16.12.2023

அளவு : 1:400

N

**குறிப்பு :**

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | : 1.86 ஏக்கர் (அ) 7530.00 சதுர மீட்டர் |
| கோரிய மனைகள் | : 24 |
| ஒதுக்கிய மனைகள் | : 24 |
| மனைப்பிரிவின் எல்லை | ........................ |
| நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை | ........................ |

**பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை) :**

I) மனைப்பிரிவின் சாலைகள் மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பு : **1944.08** ச.மீட்டர்

II) பூங்கா :

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : **(7530.00 - 1944.08 = 5585.92) x 10/100 = 558.59** ச.மீட்டர்

ii) ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு : **558.59 சதுர.மீ (10.00%)** (பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகை செலுத்தப்பட்டுள்ளது)

III. **பொது உபயோகம்:**

A) **LOCALBODY** -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு } (மனைப்பிரிவு பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) **x(0.5/100)**
**(7530.00 - 1944.08) x 0.5/100 =** 27.92 சதுரமீட்டர்

ஒதுக்கப்பட்ட பரப்பு : 28.30 சதுரமீட்டர் (0.51 %)

தான ஆவண எண்: **108/2024** நாள் :**08.01.2024** -ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:**

B) **TANGEDCO** -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு } (மனைப்பிரிவு பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) **x(0.5/100)**
**(7530.00 - 1944.08) x 0.5/100 =** 27.92 சதுரமீட்டர்

ஒதுக்கப்பட்ட பரப்பு : 28.25 சதுரமீட்டர் (0.51 %)

தான ஆவண எண்: **107/2024** நாள் :**08.01.2024** -ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

**கட்டிட வரம்பு:**

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 மீ விடப்படல் வேண்டும்

9.0மீக்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்

**மூலை முடக்கு:**

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 மீ x 1.5 மீ விடப்படல் வேண்டும்.

12.0மீக்கு மேல் 30.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5 மீ x 4.5 மீ விடப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள் :**

1. அரசாணை எண்-18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்-04.02.2019, அரசாணை எண்-16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்-31.01.2020 அரசாணை எண்-181, வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்-09.12.2020-ன் படி சாலைகள் (மூலைமுடக்குகள் உட்பட) மற்றும் 0.5% பூமி **A) LOCALBODY** -க்கும், 0.5% பூமி உள்ளாட்சி அல்லது **B) TANGEDCO**-க்கும் தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண்-181வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் மனுதாரரால் அமைக்கப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண்-141 வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள். 16.07.2022 -ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், செயல் அலுவலர் பெருந்துறை பேரூராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகலினை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரால் தார் சாலை அமைக்கப்பட்டு (EO/UE) செயல் அலுவலர் / யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
9. பிரஸ்தாப மனைப்பிரிவிற்கு இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
10. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது என அறியப்படின் இவ்வுத்தரவு செல்லதக்கதல்ல.
11. மனைப்பிரிவினை சுற்றி சுற்றுசுவர் (COMPOUND WALL) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்புபாதை அமையும் வகையில் சுற்றுசுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
12. இம்மனைப்பிரிவின் ஊடே அமையும் குறைந்த அழுத்த மின்கம்பிபாதையினை மனுதாரர் தனது சொந்த செலவில் சாலையின் போக்கிற்கு ஏற்ப மாற்றி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**SWP / DTCP / ERODE / LAYOUT APPROVAL NO. : 17 / 2024**

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

பெருந்துறை நகராட்சி
ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
நாள் : 10.10.25
ந.க.எண் : 18/2025/அ.
நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், ஈரோடு அவர்களின்
இணையதள உத்தரவு ந.க.எண் : 85Y97209/2025/TCP
நாள் : 19.1.24 இல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும்
இந் நகராட்சியில் செயல்முறையின்படி இறுதி உத்தரவு
வழங்கப்படுகிறது.

ஆணையாளர்
பெருந்துறை நகராட்சி
10-10-25

Signature valid
Signed by: Assistant Director
Location:Erode
Date:2024.01.19 20:12:39

| | |
|---|---|
| அளவர்/ உதவி வரைவாளர் | ஜெ.சீனிவாசன் |
| வரைவாளர் நிலை -III | சிவசங்கர் |
| கட்டிக்கலை / திட்ட உதவியாளர் | ரெ.மணிமொழி |